உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 18.08.2026 • மலர் 04 • இதழ்: 230 • செவ்வாய் • Edition : Nagercoil • 18.08.2026 • Vol : 04 • Issue : 230 • Page : 4 • Rs. 5/-

## ரூ.75,000 வரை பயிர்க் கடன் தள்ளுபடி:

# முதல்வர் விஜய் அறிவிப்புக்கு விவசாயிகள் சங்கம் அதிருப்தி

சென்னை: "மீண்டும் தேர்தல் காலத்தில் விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் யானை பசிக்கு சோளப் பொறி கொடுத்ததை போல முதல்வரின் செயல்பாடுகள் உள்ளன" என்று தமிழக விவசாயிகள் சங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து தமிழக விவசாயிகள் சங்க மாநிலப் பொருளாளர் ஆர். சுபாஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக முதல்வர் விஜய் 2026ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தல் அறிக்கையில் சிறு, குறு விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யப்படும். பெரு விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடன்களில் 50 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்தார்.

தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்த பிறகு அவர் அறிவித்த அறிவிப்பு விவசாயிகள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதன் எதிரொலியாக தமிழகம் முழுவதும் விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டம். உண்ணாவிரதம் உட்பட பல்வேறு வகையான போரட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், இன்று சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் மீண்டும் விவசாயிகளுக்கு ஆதரவு தருவது போலவே ரூ.75,000 ரூபாய் வரை பயிர்க் கடன்கள் பெற்ற விவசாயிகளுக்கு முழுமையாகவும், ஒரு லட்சம் ரூபாய் வரை பயிர்க் கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ.75,000 வரையும், ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் கடன் பெற்ற விவசாயிகளுக்கு 35,000 ரூபாய் வரை மட்டுமே தள்ளுபடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இது மீண்டும் தேர்தல் காலத்தில் விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் யானை பசிக்கு சோளப்பொறி கொடுத்ததை போல முதல்வரின் செயல்பாடுகள் உள்ளன.



ஒருபுறம் விவசாயிகள் உர விலை உயர்வு, வேளாண் இயந்திரங்கள் வாடகை உயர்வு, அறிவிக்கப்படாத மின்வெட்டு, விளை பொருட்களுக்கு கட்டுபாடியாகாத விலை, கால நிலை மாற்றம் உட்பட பல்வேறு வகையான பாதிப்புகளை விவசாயிகள் எதிர் நோக்கியுள்ள நிலையில், இன்றைய முதல்வரின் அறிவிப்பு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது. முதல்வரின் இத்தகைய அறிவிப்பை விவசாயிகள் ஏற்க மாட்டார்கள். தமிழக முதல்வர் விஜய் விவசாயிகளை மீண்டும் போரட்ட களத்துக்கு தள்ளிவிட்டு இருக்கிறார். சட்டப்பேரவை தேர்தலில் தமிழக முதல்வர் விஜய் அளித்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றும் வரை தொடர்ந்து பல்வேறு வகையான போரட்டத்தில் ஈடுபடுவோம்.

ஆக.20ம்தேதி சென்னை எழும்பூர் எல்ஜி கார்டனில் இருந்து புறப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையை மாநிலத்தலைவர் வேணுகோபால் தலைமையில் முற்றுகை போராட்டம் நடத்தப்படும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

---

## நாகர்கோவில் ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

### பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கிய கலெக்டர்



நாகர்கோவில், ஆக.18

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர்அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று 17ம் தேதி நடைபெற்றது. மாவட்ட ஆட்சி தலைவர் பிரதாப் தலைமை வகித்தார்.

நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித் தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித் தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 346 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து 2 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்களும், 6 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகைகான ஆணையும், 1 பயனாளிக்கு விதவை உதவித்தொகைக்கான ஆணையும், 1 மாற்றுத்திறன்பயனாளிக்கு விதவை உதவித்தொகைகான ஆணையும் என 10 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் வழங்கினார்.

முன்னதாக மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளுக்கு எளிதில் தீர்வு காணும் நோக்கில் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள்கூட்டத்தில்மாவட்ட ஆட்சித்தலைவர் மாற்றுத்திறன் பயனாளிகளின் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வேலுமணி, உதவி ஆட்சியர் பயிற்சி ர. மோனிகா, தனித்துணை ஆட்சியர் சமூகபாது காப்பு திட்டம் சரவணன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் நிலம் பத்மபிரியா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தினேஷ் சந்திரன், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

---



## பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், பேராசிரியர்களுக்கான போதைப்பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு ஆலோசனைக் கூட்டம்

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா. சிவபிரசாத், தலைமையில் நேற்று தூத்துக்குடி மாவட்ட காவல் அலுவலகத்தில் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், பேராசிரியர்களுக்கான போதைப்பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 350 பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் , பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் மற்றும் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், மாணவர்கள் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு வரும்போது முறையான சீருடை அணிதல், தலைமுடியை சீராக வைத்திருத்தல் உள்ளிட்ட ஒழுக்க விதிகளை முறையாக கடைபிடிக்கவும், சாதிகளை குறிக்கும் வகையில் வண்ணமயமான கயிறுகள் அணிவதை தவிர்க்கவும் மாணவர்களுக்கு அறிவுரை வழங்குமாறு தெரிவித்தார்.

மாணவர்களுக்கிடையே ஏற்படும் சண்டைகள் மற்றும் பிற பிரச்சனைகள் குறித்து காவல்துறைக்கு தகவல் அளிக்கப்பட்டால், சீருடை அணியாத காவலர்கள் மூலம், ஆசிரியர்கள் முன்னிலையில் சம்பந்தப்பட்ட மாணவர்களிடம் விசாரணை மேற்கொண்டு, அவர்களை நல்வழிப்படுத்தும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார். மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் போதைப்பொருட்களை முற்றிலும் ஒழிப்பதற்கான காவல்துறையின் நடவடிக்கைகளுக்கு ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கேட்டுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து பள்ளி கல்லூரிகளில் போதைப் பொருட்கள் பயன்பாடு குறித்து தகவல் தெரிந்தால் 8300014567 என்ற இலவச எண்ணிற்கு அழைத்து புகார் அளிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார். மாணவர்களின் பாதுகாப்பான மற்றும் போதைப் பொருள்இல்லாத எதிர்காலத்தை உருவாக்க காவல்துறை – கல்வி நிறுவனங்கள் இணைந்து செயல்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

---

## தக்கலை அருகே பைக் லாரி மோதி 3 தொழிலாளர்கள் உயிரிழப்பு

தக்கலை, ஆக.18

தக்கலை அருகே நேற்று அதிகாலை பைக் மற்றும் லாரி நேருக்கு நேர் மோதியதில் பிஹார் மாநிலத்தை சேர்ந்த மூன்று தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பிகார் மாநிலம் பாரிகார் பகுதியை சேர்ந்தவர் ராந்திர் குமார் (19). இவர் மார்த்தாண்டம் அருகே சிராயன்குழி பகுதியில் உள்ள ஒரு ஹோட்டல் ஒன்றில் கடந்த 2 ஆண்டுகளாக தொழிலாளியாக வேலை செய்து வந்தார். இவர் பீகார் மாநிலத்தை சேர்ந்த நண்பர்களான சதீஷ்குமார் (21) சாந்தன் (20) ஆகியோரை கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்பு, தான் வேலை பார்க்கும் ஓட்டலில் வேலைக்கு சேர்த்து விட்டுள்ளார் இதை அடுத்து மூன்று பேரும் ஒரே ஓட்டல் வேலை செய்து வந்துள்ளனர். இதற்கு இடையே நேற்று அதிகாலை சுமார் மூன்று மணியளவில் வேலை முடிந்து அவர்கள் 3 பேரும் ஒரே பைக்கில் சிராயன்குழியில் இருந்து அழகிய மண்டபம் நோக்கி புறப்பட்டனர். சதீஷ்குமார் பைக்கை ஓட்டினார். ராந்திர் குமார், சாந்தன் பின்னால் அமர்ந்து வந்தனர்.

தக்கலை அருகே காட்டாத்துறையில் உள்ள கால்நடை மருத்துவமனை அருகே பைக் வந்து கொண்டிருந்த போது அந்த வழியாக ஈரோட்டில் இருந்து காட்டாத்துறை நோக்கி கோழி தீவனம் ஏற்றி கொண்டு வந்த டாரஸ் லாரி, அங்குள்ள வளைவு பகுதியில் வந்த போது பைக்கும் டாரஸ் லாரியும் நேருக்கு நேர் மோதியது. இந்த விபத்தில் தவறி விழுந்த ராந்திர்குமார், சதீஷ்குமார், சாந்தன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே இரத்த வளத்தில் பரிதாபமாக இறந்தனர்.

தக்கலை போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பலியான மூன்று பேரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அனுப்பி வைத்தனர். போலீசாரின் முதற் கட்ட விசாரணையில் இரவில் பணியை முடித்த வட மாநில தொழிலாளர்கள் அதிகாலையில் பைக்கில் வேகமாக செல்லும்போது இந்த விபத்து நடந்ததாக தெரிகிறது. தக்கலை போலீசார் வழக்கு பதிவு செய்து லாரி டிரைவர் டேவிட் ராஜ் (63) என்பவரை விசாரணை நடத்தி வருகின்றனர்.

---

## குமரியில் மாணவிகள் மற்றும் குடும்ப பெண்களை காதலிப்பதாக கூறி நகை மற்றும் பணத்தை பறித்த காதல் மன்னன் கைது

மார்த்தாண்டம், ஆக.18

மார்த்தாண்டம் அருகே பாகோடு பாளையங்கட்டி பகுதியைச் சேர்ந்தவர் ஜெனிஷ் ( 25). இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் ஒரு குழந்தை உள்ளது. இவர் புதுக்கடை, உண்ணாமலைக்கடை, களியக்காவிளை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் குடும்ப பெண்களை காதலிப்பதாக கூறி அவர்களை பல்வேறு இடங்களுக்கு அழைத்து சென்று உல்லாசம் அனுபவித்து வந்துள்ளார். மேலும் அவர்களிடம் இருந்து நகைகளை ஏமாற்றி பறித்துள்ளார்.

இதுகுறித்து பாதிக்கப்பட்டோர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் டம் மனு அளித்தனர். இதனை தொடர்ந்து ஜெனிஷ்ஐ கண்காணிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவிட்டார். விசாரணையில் இவர் எப்போதும் சொகுசு கார் மற்றும் சொகுசு இருசக்கர வாகனங்களில் வலம் வந்து, வசதி மிக்க மாணவிகள் மற்றும் பெண்களை குறிவைத்து காதலிப்பதாக நடித்து பல்வேறு பகுதிகளுக்கு அழைத்து சென்று, அவர்களிடம் உல்லாசம் அனுபவித்து விட்டு நகைகள் மற்றும் பணங்களை பறித்து வாழ்ந்து வந்தது தெரிய வந்தது.

மேலும் ஜெனிஷ் மாணவிகள் மற்றும் பெண்களிடம் பறித்த பணத்தில் சொந்தமாக ஆம்னி பஸ் மற்றும் இரண்டு சொகுசு கார்களும் வாங்கியதும் தெரிய வந்தது. மேலும் விசாரணையில் புதுக்கடை பகுதியைச் சேர்ந்த கல்லூரி மாணவி ஒருவரை காதலித்து அவருடன் ஊர் சுற்றிவிட்டு அவரிடமிருந்து 26 பவுன் தங்க நகையை அபகரித்துள்ளார். மாணவிக்கு ஜெனீஷ்ன் சுய ரூபம் தெரிந்ததும், மாணவி அவரை விட்டு விலகியதுடன் நகையை திருப்பி கேட்டுள்ளார். ஆனால் அவர் நகையை கொடுக்காமல் ஏமாற்றி உள்ளார்.

இதனைஅடுத்து மாணவி புதுக்கடை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் ஜெனிஷ் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து திருத்துவபுரம் பகுதியில் வெளிநாட்டில் வேலை பார்க்கும் வாலிபரின் மனைவியை காதலிப்பதாக கூறி அவருடன் ஊர் சுற்றிவிட்டு அவரிடம் இருந்து நகையை பறித்துள்ளார். மேலும் உண்ணாமலை கடை பகுதியில் உள்ள வசதி மிக்க பெண்ணை காதலிப்பதாக கூறி அவரிடமிருந்தும் நகை மற்றும் பணத்தை பறித்து உள்ளார். தொடர்ந்து மருதன்கோடு பகுதியைச் சேர்ந்த 11ஆம் வகுப்பு மாணவி ஒருவர் வசதியானவர் என தெரிந்து கொண்டு, தினசரி பள்ளிக்கு செல்லும் போது சொகுசு கார் மற்றும் இரு சக்கர வாகனத்தை மாறி மாறி பயன்படுத்தி சிறுமியை ஏமாற்றி காதலிப்பதாக கூறி, அவரிடமிருந்து 40 பவுன் நகை மற்றும் பணத்தை பறித்துள்ளார்.

மேலும் பலரை ஏமாற்றியதாக தெரிய வந்தது. அதனை தொடர்ந்து தனிப்படை போலீசார் வாலிபர் ஜெனிஷ் ஐ பிடித்து மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். இதை அடுத்து மார்த்தாண்டம் அனைத்து மகளிர் போலீசார் வாலிபர் ஜெனிஷ் மீது போக்சோ பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து, அவரை குழித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து சிறையில் அடைத்தனர்.

---

## ஒகேனக்கல்லில் சட்ட தூண்கள் அறக்கட்டளை சார்பில் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

. தருமபுரி ஆகஸ்ட் 18

தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் சட்ட தூண்கள் அறக்கட்டளைசார்பில் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நிறுவனத் தலைவர் குணசேகரன் தலைமையில் நடைபெற்றது .இந்த கூட்டத்தில் அனைத்து மாவட்டத்திலும் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுத்தல், உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் மாநில மாநாடு நடத்தப்படுவது குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. மேலும் பொது மக்களிடம் இருந்து பெறப்படும் கோரிக்கைகள் மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை நேரடியாக சந்தித்து தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இந்த கூட்டத்தின் அறக்கட்டளை பொருளாளர் காவேரி, அறக்கட்டளை செயலாளர் மணி, அறக்கட்டளை அறங்காவலர்கள் முத்து , அருள், குமரவேல், மாநில ஒருங்கிணைப்பாளர் ஜோசப் ரெக்ஸ், மாநில துணை செயலாளர் நாகராஜ் , மாநில தகவல் தொழில்நுட்ட செயலாளர் கௌதம், தருமபுரி மாவட்ட தலைவர் பி. கே. சிவா, மாவட்ட செயலாளர் முனிராஜ், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முருகன், மாவட்ட நிர்வாகிகள் பிரகாஷ், சபரி ,பாலாஜி , ரகுபதி, சக்திவேல், செந்தில் (ரோஹித் பேக்கரி), குமார் (TNEB ஓய்வு), கடலூர் மாவட்ட நிர்வாகிகள் மணிமாறன், இலியாஸ் பாஷா, கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகிகள் முத்துசாமி, கமலி, விழுப்புரம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சிறிய புஷ்பம் மற்றும் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், கடலூர் பிற மாவட்டங்களில் இருந்து நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# கன்னியாகுமரியில் தெளிவான பதிவு எண் இல்லாத 18 பைக்குகள் மீது நடவடிக்கை




கன்னியாகுமரி, ஆக.17

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவின்படி போக்குவரத்து காவல்துறை சார்பாக நேற்று நகரின் முக்கியப் பகுதிகளில் அதிரடி வாகன தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து விதிகளை முறைப்படுத்தும் நோக்கில் இந்த தணிக்கை நடத்தப்பட்டது. அப்போது, கன்னியாகுமரி போக்குவரத்து போலீசார் சோதனை மேற்கொண்ட பொழுது மோட்டார் வாகன சட்ட விதிகளின் படி சரியாக நம்பர்பிளேட் பொருத்தாமல் இயக்கப்பட்ட 18 வாகனங்களை போக்குவரத்து காவல்துறையினர் கண்டறிந்தனர்.

விதிமுறைகளை மீறி, தெளிவற்ற மற்றும் முறையற்ற எண் பலகைகளுடன் இயங்கிய அந்த 18 வாகனங்களுக்கும் அபராதம் விதிக்கப்பட்டது மேலும், அந்த வாகனங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், சம்பவ இடத்திலேயே புதிய மற்றும் சரியான விதிமுறைப்படியிலான நம்பர் பிளேட்டுகளை பொருத்த உத்தரவிடப்பட்டது

இதனையடுத்து, வாகன ஓட்டிகள் தங்களது வாகனங்களின் எண் பலகைகளைச் சரி செய்த பின்னரே, காவல்துறையினர் அந்த வாகனங்களை அங்கிருந்து செல்ல அனுமதித்தனர். பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் அனைவரும் தங்களது வாகனங்களில் அரசு விதித்துள்ள விதிமுறைகளின்படி, தெளிவான எண் பலகைகளைப் பொருத்த வேண்டும் என்றும், போக்குவரத்து விதிகளுக்குக் கீழ்ப்படிந்து காவல்துறைக்குமுழுஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கன்னியாகுமரி மாவட்ட போக்குவரத்து காவல்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

# குடிநீர் இணைப்பு கேட்டு தாய், மருமகள் ஆட்சியரிடம் புகார் மனு




நாகர்கோவில் ஆக 18

கன்னியாகுமரி மாவட்டம் அழகியபாண்டிபுரம் மேல்கரை பகுதியை சேர்ந்த சாந்தி அவரது மருமகள் மாவட்ட ஆட்சியர்சந்தித்தும் புகார் மனு ஒன்றை அளித்தனர், அந்த புகார் மனுவில் கூறி இருப்பதாவது: 35 வருடத்திற்கு மேலாக நாங்கள் இப்பகுதியில் வசித்து வருகிறோம், வீட்டிற்கு முறையாக மின் இணைப்பு, கதவு எண் உள்ளது, ஆனால் தங்கள் வீட்டிற்கு குடிநீர் இணைப்பு பெற முடியவில்லை, தங்களது வீட்டு எண்ணுக்கு வேறு ஒரு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது, இதனால் தங்களுக்கு கிடைக்கக்கூடிய குடிநீர் இணைப்பு கிடைக்காமல் உள்ளது, இதுகுறித்து சம்பந்தப்பட்ட அழகிய பாண்டிபுரம் பேரூராட்சி அலுவலகத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை, மேலும் மாவட்ட ஆட்சியரை சந்தித்து புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவே தங்கள் குடிநீர் ஆதாரத்திற்காக போராட வேண்டிய நிலையில் தள்ளப்பட்டுள்ளோம் உடனடியாக மேல்கரை தெற்கு தெரு வீட்டில் வசித்து வரும் தங்களுக்கு குடிநீர் இணைப்பு வேண்டுமென அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது

# ஓசூர் மாநகராட்சி பணியாளர் சென்னகேசவனுக்கு சிறந்த மாநகராட்சி பணியாளர் விருது வழங்கி பாராட்டு



ஓசூர், ஆகஸ்ட், 18: கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மாநகராட்சி 1508 2026 அன்று இந்திய நாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஓசூர் மாநகராட்சி அலுவலகத்தில் தேசிய கொடி ஏற்றி, கலைநிகழ்ச்சிகள் மற்றும் விருது வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் (20252026) ஆம் வருடத்திற்கான சிறந்த மாநகராட்சி பணியாளருக்கான விருதை மாநகராட்சி ஆணையர் முகமது ஷபீர் ஆலம் மற்றும் மாநகராட்சி மேயர் முன்னாள் ஓசூர் சட்ட மன்ற உறுப்பினர் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக மாநகர செயலாளர் சத்யா ஆகியோர் வழங்கினார்கள். விருது வாங்கிய சென்னை கேசவனுக்கு அனைவரும் வாழ்த்துக்களும், பாராட்டுக்களும், தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் அரசு அதிகாரிகள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கோவில்பட்டி நாடார் மேல்நிலைப் பள்ளியில் நூல் வெளியிட்டு விழா மற்றும் விருது வழங்கும் விழா




கோவில்பட்டி நாடார் மேல்நிலைப் பள்ளியில் நேற்று முத்தமிழ் மன்றம் சார்பில் கோவில்பட்டி நாடார் காமராஜ் பதின்ம மேல்நிலைப் பள்ளி முதல்வர் கி.பிரபு எழுதிய "ஏ குருவி சிட்டுக்குருவி" என்ற சிறார் சிறுகதை புத்தகத்தை நாடார் மேல்நிலைப்பள்ளி செயலாளர் வழக்கறிஞர் ஜெ. ரத்தினராஜா வெளியிட நாடார் காமராஜ் பதின்ம மேல்நிலைப் பள்ளி செயலாளர் வழக்கறிஞர் செல்வம் பெற்றுக் கொண்டார். நாடார் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் செல்வம் அனைவரையும் வரவேற்றார். மேலும் இந்த நிகழ்வில் 202526 கல்வியாண்டில் அரசுப் பொதுத் தேர்வில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் தமிழ்ப் பாடத்தில் தத்தம் பள்ளிஅளவில் முதல் இடம் பெற்ற 108 மாணவர்களுக்கு முத்தமிழ் அறிவுச்சுடர் விருதும், தமிழில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற வைத்த ஆசிரியர்களுக்கு முத்தமிழ் ஆசிரியச்சிகாமணி விருதும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் நாடார் மேல்நிலைப்பள்ளி பொருளாளர் P.விஜயகுமார், உறுப்பினர்கள் வேல்முருகன் மற்றும் வெங்கடேஷ், உலகத் திருக்குறள் கூட்டமைப்பின் தலைமை கரண ஆசான் தமிழ்ச்செம்மல் பேரா. கருத்தப்பாண்டி, ஏசியாஃபார்ம்ஸ் நிறுவனர் பாபு, தொழிலதிபர் ரவி மாணிக்கம், ஆசிரியரும் எழுத்தாளருமான தங்கதுரையரசி, உலக திருக்குறள் கூட்டமைப்பு பொருளாளர் ஜெயா ஜனார்த்தனன் தம்பதியர், ஆசிரியர்கள் துரைராஜ், செல்வின், தமிழ்நாடு சிறார்எழுத்தாளர்கள்கலைஞர்கள்சங்க கோவில்பட்டி கிளை தலைவர் மணிமொழிநங்கை பொருளாளர் கண்ணகி, முத்தமிழ் மன்றம் நிர்வாகிகள் ஆசிரியை லதா தேவி மற்றும் பேராசிரியை சிவசங்கரி, திருவில்லிபுத்தூர் அரசு கலை அறிவியல் கல்லூரி முன்னாள் முதல்வர் காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். ஏ குருவி சிட்டுக்குருவி நூல் ஆசிரியர் பிரபு ஏற்புரை வழங்கினார்.

முத்தமிழ் மன்றத் தலைவர் வரகவி நல்லாசிரியர் மா. முருகேசன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். இந்நிகழ்வில் பெற்றோர்கள் ஆசிரியர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.



# கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வாரந்தோறும் திங்கட்கிழமை அன்று மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம், வீட்டு மனைப் பட்டா, விலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, முதியோர் உதவித்தொகை, சாலை வசதி, மின் இணைப்பு மற்றும் மகளிர் உரிமைத்தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து 826 மனுக்கள் பெறுக்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட மனுக்களில் தகுதியான மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவும், தகுதியில்லாத மனுக்களுக்கு உரிய விளக்கத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தெரிவித்தார். முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் , மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் முகாமில், மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றக்கொண்டார். தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, கால்துண்டிக்கப்பட்ட 2 மாற்றுத்திறனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் மூலம் ரூ.49,600 மதிப்பில் செயற்கை கால்களை வழங்கினார்.

# சுசீந்திரம் தாணுமாலயன் சுவாமி திருக்கோயில் புஷ்பாபிஷேக விழா



சுசீந்திரம். ஆக.18

சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவிலில் வருடம் தோறும் ஆடி மாத கடைசி தினங்களில் புஷ்ப அபிஷேகம் நடைபெறுவது வழக்கம் அது போல நேற்று ஆடி மாத கடைசி திங்கட்கிழமையை யொட்டி புஷ்பாபிஷேக விழ நேற்று 17ந் தேதி மாலை 6.30 மணிக்கு நித்தியகாரிய பூஜைகள் முடிந்த பிறகு கோவிலின் முதற்கடவுளான தட்சிணாமூர்த்தி சன்னதி, கொன்றையடி சன்னதி, தாணுமாலய சன்னதி, திருவேங்கட விண்ணவரம் பெருமாள் சன்னதி, நீலகண்ட விநாயகர், கைலாசநாதர், சாஸ்தா, ராமர், முருகன், காலபைரவர் ஆகிய சன்னதிகள் உள்பட கோவில் சுற்றுப்பிரகாரங்களில் உள்ள அனைத்து தெய்வங்களுக்கும் புஷ்பாபிஷேகம் நடைபெற்றது அதைதொடர்ந்து நிறைவாக விஸ்வரூப ஆஞ்சநேயருக்கு புஷ்பாபிஷேகம் நடைபெற்றது இந்த புஷ்பாபிஷேக விழாவில் கிரேந்தி, வாடாமல்லி பூக்களை தவிர்த்து மீதமுள்ள பூக்களால் ஆஞ்சநேயருக்கு புஷ்பாபிஷேகம் நடைபெற்றது அதற்கு முன்பாக நேற்று காலை கருட பஞ்சமி யை முன்னிட்டு தாணுமாலய சுவாமி அருகே உள்ள திருவேங்கடவ விண்ணவப் பெருமாள் ஸ்ரீதேவி பூதேவி சன்னதி முன்பு அமைந்துள்ள முழு உருவ கருட பகவானுக்கு அதி காலை அபிஷேகம் நடைபெற்றது பின்பு அலங்கரிக்கப்பட்ட கருட பகவானுக்கு சிறப்பு அலங்கார தீபாராதனை நடைபெற்றது இதில் உள்ளூர் மட்டுமின்றி வெளியூர் பக்தர்களும் பெருமளவு கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்




# ஈரோட்டில் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பாரதீய மஸ்தூர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்

ஈரோடு ஆக17

பாரதீய மஸ்தூர் சங்கம் சார்பில் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடந்தது . ஈரோடு வீரப்பன் சத்திரம் பஸ் நிறுத்தம் அருகே நடந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஈரோடு மாவட்ட தலைவர் வெங்கடேசன் தலைமை தாங்கினார். பாரதிய கட்டுமான தொழிற்சங்க பேரவை மாநில தலைவர் சௌந்தர்ராஜன் ஆர்ப்பட்டத்தை தொடங்கி வைத்து பேசினார். ஈரோடு மாவட்ட செயலாளர் ரமேஷ் முன்னிலை வகித்தார். மாவட்ட பொருளாளர் சரவணகுமார் நன்றி கூறினார் மற்றும் கட்டுமான தொழிலாளர் சங்கம் கதிர்வேல் போக்குவரத்து துறை முருகேசன் மருந்து பிரதிநிதிகள் சார்பில் பிரபு டாஸ்மாக் சங்கம் சார்பில் முருகேசன் மற்றும் பிரகாஷ் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர் . தொழிலாளர் சட்ட தொகுப்புகளை திருத்தம் செய்ய வேண்டும் .அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வு திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும் ஒப்பந்த தொழிலாளர்கள் உட்பட அனைத்து தொழிலாளர்களுக்கும் சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும். விலை வாசி உயர்வுக்கு ஏற்ப குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்பது உள்பட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

# தஞ்சாவூர் அடுத்துள்ள புன்னைநல்லூர் அருள்மிகு மாரியம்மன் கோவிலில் ஆவணி திருவிழா தொடக்கம்



தஞ்சாவூர்ஆகஸ்ட் 18

தஞ்சாவூர் அடுத்துள்ள புன்னை நல்லூர் அருள் மிகு மாரியம்மன் கோவிலில் ஆவணி திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது

நிகழ்ச்சியில் அம்மன் படிச்சட்டத் ததில் எழுந்தருளியதை தொடர்ந்து கொடிமரத்துக்கு அபிஷேகம், ஆராதனை, அம்மன் வீதி உலா நடைபெற்றது.9தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை ஆகஸ்ட் 16 முத்து பல்லக்கு விழாவும்,18 ஆம் தேதி முத்து பல்லக்கு விடையாற்றி விழாவும் நடைபெறுகிறதுஆவணி முதல் வார ஞாயிற்றுக் கிழமை ஆகஸ்ட் 23ஆம் தேதி சிம்ம வாகனத்திலும், இரண்டாம் வாரம் ஞாயிற்றுக்கிழமை ஆகஸ்ட் 30ஆம் தேதி அன்ன வாகனத்திலும் மூன்றாவது வாரம் செப்டம்பர் 6ஆம் தேதி வெள்ளிஅன்ன வாகன த்திலும் அம்மன் புறப்பாடு நடைபெறுகிறது

இதனிடையே செப்டம்பர் 5ஆம் தேதி பெரிய காப்பு, படிசட்டத்தில்அம்மன் புறப்பாடு, பின்னர் செப்டம்பர் 8ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை நாள்தோறும் பல்வேறு வாகனங்களை அம்மன் புறபாடும்நான்காம்வாரம் ஞாயிற்றுக்கிழ மையான செப்டம்பர் 13ஆம் தேதி தேரோட்டமும், 15ஆம் தேதி கொடி யிறக்கமும், விடையாற்றி அபிஷேகமும் அக்டோபர் 20ஆம் தேதி, தெப்பதிருவிழாவும் 22 ஆம் தேதி தெப்ப விடையாற்றிவிழாவும் ஆகியவை நடைபெறுகிறது.

# ஈரோடு ஸ்ரீ எல்லைமாரியம்மன் கோவிலில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வழிபாடு

## பாதுகாப்பு கோரி ஆட்சியரிடம் மனு



ஈரோடு ஆகஸ்ட் 18

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ரோடு, மணல்மேடு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ எல்லைமாரியம்மன் கோவிலில் 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வழிபாடு செய்து வருகின்றனர் . இந்நிலையில், கோவிலில் உள்ள இடத்தில் சில நபர்கள் தங்களின் பேரில் கோவிலை எடுத்துக் கொள்ள முயற்சி செய்வதாகவும், இதனால் பக்தர்களுக்குபாதிப்புஏற்படும் சூழல் உள்ளதாகவும் மணல்மேடு ஊர் பொது மக்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது .

மேலும், கோவில் வளாகத்தில் அத்துமீறல்கள் ஏற்படாமல் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொண்டு, கோவிலையும் அதன் இடத்தையும் பாதுகாக்க வேண்டும் என ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள்மனுஅளித்துள்ளனர்.

# தென்காசியில் ஸ்கேட்டிங் மாரத்தான் உலக சாதனை முயற்சி




தென்காசி, ஆகஸ்ட்.18

தென்காசியில் சுதந்திர தினத்தை முன்னிட்டு உலக சாதனை முயற்சியாக தொடர்ந்து 80 நிமிடங்கள் ஸ்கேட்டிங் மாரத்தான் செய்து மாணவ மாணவிகள் அசத்தினர்.

நாடு முழுவதும் 80வது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. சுதந்திர தின விழாவை முன்னிட்டு பல்வேறு பகுதிகளில் விளையாட்டு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது அதே போல் தென்காசியை அடுத்த மத்தளம் பாறையில் உலக சாதனை முயற்சியாக தொடர்ந்து 80 நிமிடங்கள் ஸ்கேட்டிங் மாரத்தான் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழகத்தின் தென் மாவட்டங்களைச் சேர்ந்த 500 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இரண்டு சுற்றுகளாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவிகள் தொடர்ந்து 80 நிமிடங்கள் ஸ்கேட்டிங் மாரத்தான் மேற்கொண்டு குளோபல் டேலன்ட், யுனிவர்சல் ஸ்போர்ட்ஸ், எலைட் வீ கென்ட்ஸ் ஆகிய மூன்று உலக சாதனை புத்தகத்தில் இடம் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட பள்ளி மாணவ மாணவிகளை பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு உற்சாகப்படுத்தினர். மாணவர்களின் ஸ்கேட்டிங் மாரத்தான் உலக சாதனை முயற்சியை கணேஷ் குமார், கணேசன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். ஏற்பாடுகளை யோகா பயிற்சியாளர்கள் பாக்கியராஜ், கணேஷ், வேலுச்சாமி செய்திருந்தனர். பயிற்சியாளர்கள் நாகராஜ், ராம்ராஜ், சக்திராஜன், சுப்பிரமணியன், கவிமணி, வினிதா, பார்வதி, கலைமதி, முத்துமுருகன், அருண்குமார், இசக்கிமுத்து, ஆனந்த், கண்ணன் ஆகியோர் மாணவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் உடன் இருந்தனர்.




ஆண்டுவிழா நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆகியவை ஈரோடு கொங்கு கலையரங்கில் நடந்தது.இதில்ஈரோடு மாநகர் மாவட்ட மதிமுக செயலாளரும்,மறுமலர்ச்சி இரத்ததானகழகஒருங்கிணைப்பாளருமான கலந்து கொண்டு முருகன் எளியமலைவாழ்மக்களுக்கு 40போர்வை,மற்றும்கைலிகளைதிட்ட இயக்குநர் ரகுபதியிடம் வழங்கினார்.அருகில் இதயம் நற்பணி இயக்க தலைவர்எஸ்.வி.மகாதேவன்மொடக்குறிச்சி சட்ட மன்ற உறுப்பினர் சண்முகன்,காஞ்சிகுமார்,செங்குந்தர் கல்விக்கழக செயலாளர்சிவானந்தம், மற்றும்திருநாவுக்கரசு,சிவ சண்முகம்உள்படபலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சிறு தொழில் கடனுதவி வேண்டி கோரிக்கை மனு அளித்த மாற்றுத்திறனாளி பயனாளிக்கு கோரிக்கை மனுவின்மீது உடனடி தீர்வாக மானியத்துடன் கூடிய கடனுதவிக்கான ஆணையினை மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி, நேற்று வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சங்கர்கணேஷ் ஆகியோர் உள்ளனர்.

# திமுக கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்து பெற்றார்



கிருஷ்ணகிரி ஆகஸ்ட் 18

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், தனது பிறந்த நாளையொட்டி கழகத்தலைவரும் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலினை அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.



# ஈரோட்டில் அடிப்படை வசதிகள் கோரி பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு!

ஈரோடு ஆகஸ்ட் 18

ஈரோடுமாவட்டம்பெருந்துறை வட்டம் சிறுக்கலஞ்சி ஊராட்சி ஸ்ரீ சக்தி நகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர், சாக்கடை, சாலை மற்றும் குப்பைத் தொட்டி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து தரக் கோரி, ஸ்ரீசக்தி நகர் பொது மக்கள் சார்பில் ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

மனுவில், ஸ்ரீ சக்தி நகர் பகுதியில் சுமார் 60க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதாகவும், இப்பகுதியில் சீரான குடிநீர் வசதி, சாக்கடை மற்றும் கழிவுநீர் கால்வாய், வீதி சாலை மற்றும் குப்பைத் தொட்டி வசதிகள் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் டெங்கு, மலேரியா உள்ளிட்ட நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும், பொதுமக்களின் நலன் கருதி உரிய நடவடிக்கை எடுத்து அடிப்படை வசதிகளை விரைந்து செய்து தர வேண்டும் எனவும் மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# தருமபுரி மாவட்ட இலட்சிய ஜனநாயக கட்சியின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

தருமபுரி ஆகஸ்ட்1 8

தருமபுரி மாவட்ட இலட்சிய ஜனநாயக கட்சி சார்பில் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்திற்கு வருகை தந்த மாநில பொதுச் செயலாளர் நெல்லை சிவா மற்றும் மாநில துணைச் செயலாளர் பூபதி ஆகியோருக்கு மாவட்ட எல்லையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது இதை தொடர்ந்து அதியமான், அவ்வையார், மகாத்மாகாந்தி, நேரு, காமராஜர் ஆகியோர் சிலைகளுக்கு மாலை அணிவித்தர். பின்னர் பழைய தருமபுரியில் அமைந்துள்ள புதிய மாவட்ட கட்சி அலுவலகத்தை திறந்து வைத்தார். மாவட்ட செயலாளர் கார்த்திக் தலைமையில் தனியார் திருமண மண்டபத்தில் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் நெல்லை சிவா கலந்துகொண்டு மாவட்ட, நகர, ஒன்றிய ஆகிய பணிகளுக்கான நியமன ஆணைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் தலைமை நிலைய செயலாளர் ஞானசேகரன், மாநில துணை பொதுச்செயலாளர் பிரகாஷ் ,மாநில பொறியாளர் அணி செயலாளர் தமிழ்அழகு, மாநில துணைப் பொதுச் செயலாளர் ஜெய்காந்த், தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் மணிகண்டன், மாவட்ட துணை செயலாளர் குமார், முனிரத்தினம், சசிகுமார் மற்றும் அனைத்து அணி நிர்வாகிகள்,மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# தொழில் நுட்ப நிறுவன 22வது பட்டமளிப்பு விழா




சென்னை, ஆகஸ்ட் 18, எஸ்.ஆர்.எம்.அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் "பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் நிறுவன 22வது பட்டமளிப்பு விழா காட்டாங்குளத்தூர் வளாகத்தில் அமைந்துள்ள டாக்டர் டி.பி. கணேசன் அரங்கத்தில் பெற்றது. எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிறுவனர் பாரி வேந்தர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், இந்தியதுணைக்குடியரசுத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். மேலும் தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களின் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார்.

இதில் மஹிந்திரா & மஹிந்திரா நிறுவனத்தின் ஆட்டோமொட்டிவ் பிசினஸ் தலைவர் ஆர் .வேலுசாமி கௌரவ டாக்டர் ஆஃப் சயின்ஸ் (Doctor of Science Honoris Causa) பட்டம் வழங்கப்பட்டது . இதனை தொடர்ந்து அனைத்து வளாகங்களையும் சேர்த்து மொத்தம் 11,684 பட்டங்களை பெற்றனர்

இதில் காட்டாங்குளத்தூர் மற்றும் வடபழனி வளாகங்களில் இருந்து மட்டும் 8.884 பேர் ஆவர். 7,926 பட்டதாரிகள் 158 முனைவர் பட்ட ஆய்வாளர்கள் தங்களது கல்வித் திட்டங்களில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற 147 பதக்க வெற்றியாளர்களும் பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் புலத்தின் கீழ் முனைவர் பட்டம், இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்புகளை நிறைவு செய்த பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டது.




திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறை தீர்வுநாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 05 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.33,400/ மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்வழங்கினார்.

# தஞ்சாவூரில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் ரேவதி தலைமையில் நடை பெற்றது



தஞ்சாவூர் ஆகஸ்ட் 18

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர்அலுவலககூட்டரங்கில் பொது மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் ரேவதி தலைமையில் நடைபெற்றது

கூட்டத்தில் இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், உள்ளிட்ட பல் வேறு கோரிக்கை கள் அடங்கிய 510 மனுக்களை பொது மக்கள் மாவட்ட கலெக்டரிடம் வழங்கினார்கள். இம்மனுக்கள் மீது உரியநடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் ரேவதி உத்தரவிட்டார்

அதனைத் தொடர்ந்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் தலா ரூபாய் 3500 வீதம் இரண்டு நபர்களுக்கு ரூபாய் 7000 மதிப்பில் காதுக்குப் பின்புறம் அணியும் காதொலிக் கருவிகளை மாவட்ட கலெக்டர் வழங்கினார்

மேலும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையில் நலத்துறை சார்பில் கும்பகோணம் வட்டம் வடகரை தூய லூர்து அன்னைபங்குஆலயத்தை புணரமைத்தல் மற்றும் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள் வதற்கு ரூபாய் 20,00 000 நிதி ஒப்பளிக்கப்பட்டு அதில் 75 சதவீதமுதல் கட்ட தவணை ரூபாய் 15,00,000 விடுவிக்கப்பட்டதை தொடர்ந்து, மீதமுள்ள இறுதி கட்ட 25 சதவீத தவணையை ரூபாய் 5,00,000ஐ தூய அன்னை பங்கு ஆலயத்திற்கு காசோலையாக மாவட்ட கலெக்டர் ரேவதி வழங்கினார்


பின்னர் மாவட்ட ஆட்சியர் மக்கள் குறைதீர்க்கும் நாள்கூட்ட அரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் அனைத்து பிரிவுகளில் அதிக அளவிலான விளையாட்டு வீரர்கள் எளிதாக பதிவேற்றம் செய்யும் வகையில் க்யூ கோடு போஸ்டர் வெளியிட்டார்கள்

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இளங்கோவன், தனித் துணை ஆட்சியர் சமூக பாதுகாப்புத் திட்டம் சௌமியா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை நல அலுவலர் சத்தியபாமா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் செந்தில்குமார் ,மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி செயல்படாத கல்குவாரியில் பெண்ணின் சடலம் மீட்பு

திருப்பத்தூர் ஆக் 18

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி பாரத் நகர் பகுதியில் செயல்படாத கல்குவாரியில் பெண்ணின் சடலம் மீட்பு. உடல் முழுவதும் காயங்களுடன் கல்லை கட்டி நீரில் தூக்கி வீசி கொலை செய்துள்ளனர். அரூரில் பெண்ணை கொலை செய்து வாணியம்பாடியில் வீசப்பட்டதாக காவல்துறை முதல் கட்ட விசாரணையில் தகவல். 24 சவரன் தங்க நகை மற்றும் 25 ஆயிரம் ரூபாய் ரொக்க பணத்துடன்



மனைவி காணாமல் போனதாக கணவர் அசோகன் பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையத்தில் புகார்.

# தமிழ்நாடு ஆர்கனேஸ் ஒர்க்கர்ஸ் பெடரேசன் தொழிற்சங்கத்தின் சார்பாக 80வது சுதந்திர தின விழா



பாலக்கோடு ஆகஸ்ட் 18:

தமிழ்நாடு அன்டு ஆர்கனேஸ் ஒர்க்கர்ஸ் பெடரேசன் தொழிற்சங்கத்தின் சார்பாக 80வது சுதந்திர தின விழா, தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு தொழிற்சங்க அலுவலகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. சுதந்திர தின விழாவில் தொழிற்சங்கத்தின் மாநில துணைத்தலைவரும் மற்றும் தர்மபுரி மாவட்ட தலைவருமான எம். மகேந்திரன் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி சுதந்திர தினத்தின் பெருமைகளை எடுத்துரைத்தார். விழாவில் மாரண்டஹள்ளியை சேர்ந்த மாணவி எ.தர்ஷினிக்கு உயர் கல்வி பயில உதவித்தொகையாக ரூ.5000 /ஐ, எம்.மகேந்திரன் வழங்கி ஊக்கப்படுத்தினார். விழா நிறைவில், கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி நன்றி பாராட்டினார்.

# தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்திற்கு ரூபாய் 43.21 கோடி ஒதுக்கீடு

தஞ்சாவூர் ஆகஸ்ட் 18

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்திற்குதமிழக அரசு 2026 27 ஆம் ஆண்டிற்கான தொகுப்பு நல்கை யாக 43.21போடி ஒதுக்கீடு செய்து ள்ளது என்றார் துணைவேந்தர் குழு உறுப்பினர் பாரத ஜோதி.

இந்த பல்கலைக்கழகத்தில்நடந்த சுதந்திர தின விழாவில் தேசிய கொடி ஏற்றி வைத்து அவர் பேசியதாவது;

தமிழ் பல்கலைக்கழகத்தில் கடந்த ஜனவரி பருவத்தில் முனைவர் பட்டத்திற்கு 30 மாணவர்களும் ,2026 27 கல்வியாண்டில் முதுகலை பட்டப்படிப்பு 123 மாண வர்களும் ,ஒருங்கிணைந்த முதுக லை பட்டப் படிப்புக்கு 74 மாணவர்களும்,பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புக்கு 130 மாணவர்களும், இளங்கல்வியியல் மற்றும் கல்வி யியல் நிறைஞர் படிப்புக்கு 62 மாணவர்களும் என மொத்தம் 419 மாணவர்களின்சேர்க்கப்பட்டுள்ள னர்.

தமிழக அரசு 2026 2027 ஆம் ஆண்டுதொகுப்பு நல்கையாக ரூபாய் 43 கோடி 21 இலட்சத்து,26 ஆயிரம்ரூபாயும்,வருகை தரும் பேராசிரியரின் மதிப்பூதியத்தியத் துக்கு ரூபாய் 36 லட்சம் ரூபாயின் வழங்கி உள்ளது . என்றார் அவர்.

# பழங்குடி சமூக நல கூடத்திற்கு மின்சாரம் வழங்க, வனத்துறை ஒப்புதல் அளிக்க கோரிக்கை

அருமனை அருகே பேணு தலைக்குமலையில் கடந்த 10 வருடங்களுக்கு முன் வனத்துறை சார்பில் பழங்குடி சமூக நல கூடம் கட்டி மக்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் பழங்குடி மக்களுக்கு வாழை நாரில் கைவினைப்பொருட்கள் உருவாக்கும் இயந்திரமும் வழங்கப்பட்டது.



ஆனால் 10 வருடங்களாக மின்சாரம் வழங்கப் படாததால் வாழைநார் கைவினை பொருள் கள் தயாரிக்கும் இயந்திரம் காட்சி பொருளாக மாறி வெளியில் வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து சமூக நலகூடத்தில் வைத்து நடைபெறும் பழங்குடி நிகழ்வுகளுக்கு ஜெனரேட்டர் எடுத்து வைத்து நிகழ்வுகளை நடத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பல முறை மனு அளித்தும் எந்த வித நடவடிக்கையும் இல்லை என பழங்குடி மக்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

எனவே வனத்துறை நிர்வாகம், மாவட்ட நிர்வாகமும் இதை கவனத்தில் கொண்டு மின்சாரம் வழங்க ஒப்புதல் வழங்க வேண்டுமென தலைக்குமலை பழங்குடி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 80ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு

# திருப்பூரில் மாவட்ட அளவிலான கபடி சாம்பியன்ஷிப் போட்டி கோலாகலம்!



திருப்பூர்,ஆக18

80ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு திருப்பூர்மாவட்டஅமெச்சூர் கபடி கழகமும்,ஜெய சித்ரா ஸ்போர்ட்ஸ் கிளப்பும் இணைந்து நடத்தும் 202627ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான ஆண்கள் மற்றும் பெண்கள் கபடி சாம்பியன்ஷிப் போட்டி திருப்பூர் காங்கேயம் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டப வளாகத்தில் நடைபெற்றது. திருப்பூர் மாவட்ட கபடிக் கழக துணைத் தலைவர் முருகானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த போட்டியை, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மணிஷ் நாரணவரே சங்கர் ராவ், திமுக மத்திய மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ், தெற்கு மாநகர செயலாளர் டி கே டி. நாகராஜன். தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்கள்..

இந்த ஆண்டுக்கானமாவட்ட அளவிலான போட்டி லீக் முறையில் நடைபெற்று வருகிறது 37 ஆண்கள் அணிகளும், 22 பெண்கள் அணிகளும் பங்கேற்று விளையாடுகின்றன. போட்டியில் முதல் பரிசாக ரூ.25 ஆயிரம் ரொக்கப் பரிசும், ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள சுழற்கோப்பையும், இரண்டாம் பரிசாக ரூ.15 ஆயிரம் ரொக்கப் பரிசும், ரூ.15 ஆயிரம் மதிப்புள்ள சுழற்கோப்பையும், மூன்றாம் பரிசாக ரூ.10 ஆயிரம் ரொக்கப் பரிசும்,ரூ.10 ஆயிரம் மதிப்புள்ள சுழற்கோப்பையும் வழங்கப்பட உள்ளது.

மேலும், மாவட்டத்தில் உள்ள சிறந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு கல்வி உதவி, மருத்துவ உதவி மற்றும் மாநில, தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களுக்கு வேலை வாய்ப்பு உள்ளிட்ட பல் வேறு உதவிகளை திருப்பூர் மாவட்ட கபடி கழகம் தொடர்ந்து வழங்கி வருவதாக விழாவில் தெரிவிக்கப்பட்டது.

# தமிழ்நாடு வணிகர் சங்கம் சார்பில் 80வது சுதந்திர தின கொடியேற்றும் விழா




காரைக்குடி:

இந்திய சுதந்திர திருநாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு வணிகர் சங்கம் சார்பில் சுதந்திர தின கொடியேற்றும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவில் தமிழ்நாடு வணிகர் சங்கத்தின்வணிகப்போராளி மாயன் ரமேஷ் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார். மாநிலத் துணைத் தலைவர் தங்க முருகன், பர்மா பஜார் வியாபாரிகள், சங்கத்தின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் வணிகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து, சுதந்திரதினத்தின்மகிழ்ச்சியை பொதுமக்களுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. விழாவில் வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு, நாட்டின் 80வது சுதந்திர தினத்தை தேசப்பற்று உணர்வுடன் உற்சாகமாகக் கொண்டாடினர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# திருப்பூரில் எம்ஜிஆர் 109வது பிறந்த தின விழா நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது



திருப்பூர் .

திருப்பூரில் முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்ஜி ஆர்அவர்களின்109வது பிறந்த தின விழா முன்னாள் சென்னை மேயர் சைதை துரைசாமி பங்கேற்றுநலத்திட்டஉதவிகளை வழங்கினார்

திருப்பூர் வாலிபாளையத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் திருப்பூர் மாவட்ட மக்கள் திலகம் டாக்டர் எம்ஜிஆர் பக்தர்கள் பேரவை சார்பில் மக்கள் திலகம் புரட்சித் தலைவர்எம்ஜிஆர் அவர்களின் 109வது பிறந்த நாளை முன்னிட்டு முன்னாள் சென்னை மேயரும் மனிதநேய இலவச ஐஏஎஸ் பயிற்சி மையத்தின் தலைவருமான சைதை துரைசாமி அவர்களின் தலைமையில் புரட்சித் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா நடைபெற்றது, இந்த விழாவில் சிறுவர்களுக்கான போட்டிகள், மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் சைதை துரைசாமி கலந்து கொண்டு சிலம்பாட்டம் பேச்சுப்போட்டி ஓவியப் போட்டி உள்ளிட்டவற்றில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கான பாராட்டு சான்றிதழ்களை வழங்கி விழா சிறப்புரையாற்றினார்.

மேலும் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினர்.முன்னதாக சிறுவர்களுக்கான போட்டிகள் கலை நிகழ்ச்சி நடைபெற்றன, இதில்திருப்பூர்மாவட்ட மக்கள் திலகம் எம்ஜிஆர் பக்தர்கள் பேரவையினர் பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

# கொல்லங்கோடு அருகே 11 ஆயிரத்து 111 நெய் தேங்காய்களுடன் இருமுடி கட்டி பக்தர்கள் சபரிமலைக்கு ஊர்வலம்

மார்த்தாண்டம், ஆக. 18



கொல்லங்கோடு அருகே மன்னன்குளம் பகுதியில் அமைந்துள்ள தர்ம சாஸ்தா கோயிலில் அந்த பகுதியை சேர்ந்த ஐயப்ப பக்தர்கள் ஆவணி மாத பூஜைக்காக சபரிமலை ஐயப்பனை தரிசிக்க வேண்டி, 11 ஆயிரத்து 111 நெய் தேங்காய்கள் நிறைத்து இருமுடி கட்டி மேளதாளங்கள் முழங்க, சரணகோஷ முழக்கங்களுடன் பக்தர்கள் தெய்யம் உட்பட்ட பல கலைஞர்கள் ஊர்வலமாக பெண்கள் முத்து கொடை ஏந்தி பூக்கள் தூவி வரவேற்பு அளித்தனர் முப்புரம் காவு கோயில் வரை ஊர்வலமாக சென்றனர். அங்கிருந்து நெய் தேங்காய்களுடன் இருமுடி கட்டு ஏந்தி சபரிமலை சன்னிதானத்திற்கு பக்தர்கள் வாகனம் மூலம் புறப்பட்டுச் சென்றனர்.

இந்த நிகழ்வில் சுற்று வட்டார பகுதிகளைச் சேர்ந்தஏராளமானஐயப்ப பக்தர்கள்கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்து வழிபட்டனர்.

பக்தர்களின் ஊர்வலத்தால்அப்பகுதிமுழுவதும் பக்தி மயமாக காட்சியளித்தது.

# புதுக்கடை, அருமனை பகுதிகளில் திராவகம் குடித்து பெண் உட்பட 2 பேர் தற்கொலை

நாகர்கோவில், ஆக.18

புதுக்கடை அருகே தவிட்ட விளை பகுதி சேர்ந்தவர்ஜான்சன் என்பவர் மனைவி விஜயா (54). இந்த தம்பதிக்கு ஜெனிஸ் (24) என்ற மகனும் ஒரு மகளும் உள்ளனர். மகளுக்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது. விஜயாவின் கணவர் ஜான்சன் ஏற்கனவே இறந்து விட்டார். இந்த நிலையில் விஜயா கடந்த 10 ஆண்டுகளாக மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்ததாக கூறப்படுகிறது.

தற்போது விஜயா புதிதாக வீடு கட்டி உள்ளார். சம்போதனம் ஜெனிஸ் புதுமனை புகுவிழா அழைப்பிதழ் கொடுக்க வெளியில் சென்று விட்டார். பின்னர் அவர் வீட்டிற்குதிரும்பிவந்தபோது வீட்டில் இருந்த விஜயா திராவகம் குடித்து உயிருக்கு ஆபத்தான நிலையில் காணப்பட்டுள்ளார்.

இதையடுத்து மகன் தாயை மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார் பின்னர். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. ஆனால் தக்கலை செல்லும் போது உடல்நிலை மோசமாகி அங்குள்ள மருத்துவமனையில் அனுமதித்த போது, அவரை பரிசோதனை டாக்டர்கள் விஜயா ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினார்கள்.

இது குறித்து ஜெனிஸ் அளித்த புகாரின் பேரில் புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.இது போன்று அருமனை அருகே அண்டுகோடுபகுதியைசேர்ந்த கூலி தொழிலாளி ராஜையன். இவருக்கு மது குடிக்கும் பழக்கம் உள்ளதாக கூறப்படுகிறது. சம்பவ தினம் ரப்பர் தோட்டத்தில் போதையில் படுத்திருப்பதாக அவரது மகன் கிறிஸ்டோபர் என்பவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மகன் தோட்டத்தில் சென்று பார்த்த போது தான் ஆசிட் குடித்து விட்டதாக கூறியுள்ளார். உடனடியாக அவரை மீட்டு சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் ராஜையன் பரிதாபமாக உயிரிழந்தார். அருமனை போலீசார் வழக்கு பதிவு செய்துவிசாரணைநடத்தி வருகின்றனர்.

# காவல்துறை மற்றும் பொதுமக்கள் நல்லுறவுக்கான விளையாட்டுப் போட்டிகள்




இந்திய நாட்டின் 80 ஆவது சுதந்திர தினம் நாடு முழுவதும் ஆகஸ்ட் 15 கொண்டாடப்பட்டது. இந்தசுதந்திரதினவிழாவை சிறப்பிக்கும் விதமாக சிவகங்கை மாவட்ட காவல் துறை மற்றும் பொதுமக்கள் இணைந்து நல்லறவுக்கான கபடி மற்றும் கைப்பந்து போட்டிகள் காரைக்குடியில் உள்ள காவலர்குடியிருப்புமைதானத்தில் நடைபெற்றது.15,16 ஆகிய இரண்டு தினங்கள் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளுக்கு சிறப்பு அழைப்பாளர்களாக காரைக்குடி காவல் உதவி கண்காணிப்பாளர் ஆசிஸ் புனியா, அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் .S.சுப்பையா, மருங்கிபட்டி G ரமேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பள்ளி மாணவர்களுக்கான கபடி போட்டியில் முதல்பரிசினைசிவகங்கை அரசு மன்னர் பள்ளியும், இரண்டாம் பரிசு ஆ. தெக்கூர் ஸ்ரீ விசாலாட்சி கலாசாலை பள்ளியும், மூன்றாவது பரிசை செக்ககுடி & SDAT B அணியினர்பகிர்ந்து கொண்டனர். நாற்பதுவயதிற்கு மேற்பட்டான கபடி போட்டியில் முதல் பரிசினை காரைக்குடி நண்பர்கள் அணியும் , இரண்டாம் பரிசினை திருச்சி அணியினரும், மூன்றாம் பரிசினை புதுக்கோட்டை ஏம்பல் அணியினரும், நான்காம் பரிசு மதுரை மாவட்டம் இடையபட்டி அணியினரும் பெற்றனர் . வெற்றி பெற்ற அணியினருக்கு பரிசு தொகையுடன் பதக்கம் வழங்கப்பட்டது. காவல்துறை மற்றும் பொதுமக்களுக்கு இடையிலான நல்லுறவை உருவாக்கும் தோக்கோடு நடைபெற்ற போட்டியினை பொதுமக்கள் பாராட்டி சென்றனர்.

# தூத்துக்குடியில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தூத்துக்குடியில் மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் 463 மனுக்கள் பெறப்பட்டது. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, மனுக்களின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பொதுமக்களிடம்இருந்து கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல் உத்தரவு, வரன்முறைப்படுத்தி பட்டா, மகளிர் உரிமைத்தொகை, தொழில் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளி உதவித்தொகை மற்றும் இதர பல்வேறு மனுக்கள் என 420 மனுக்களும், மூத்தகுடிமக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரத்யேக இடத்தில் மூத்த குடிமக்களிடமிருந்தும் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 23 மனுக்களும், மாற்றுத்திறனாளிகளை நேரில் சந்தித்து அவர்களிடமிருந்து 20 மனுக்கள் என மொத்தம் 463 மனுக்களை பெற்றுக்கொண்டார். முன்னதாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 1 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.13,500 மதிப்பீட்டில் மடக்கு சக்கர நாற்காலியினை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் மூ.குருச்சந்திரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் / தனித் துணை ஆட்சியர் சமூக பாதுகாப்புத் திட்டம் (பொ) விஜயா, உதவி இயக்குநர் ஊராட்சிகள் சாந்தி, மற்றும் அனைத்துத்துறை சார்ந்த அரசு அலுவலர்கள்பலர்கலந்து கொண்டனர்.



# ஐ டி பி எல் நிறுவனத்தை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்!

திருப்பூரில் பாரத் பெட்ரோலியம் என்கின்ற தனியார் நிறுவனம் கேரள மாநிலம் கொச்சியிலிருந்து கோவை மாவட்டம் இருகூர் வரையும் கோவை மாவட்டம் இருகூரிலிருந்துகரூர் வரையிலும் விவசாய விவசாய விளைநிலங்கள் வழியாக 1995 இல் பெட்ரோல் டீசல் கொண்டு செல்லக்கூடிய வகையில் ஒரு குழாயை அமைத்துள்ளது கொலை பதிக்கப்பட்ட நிலங்கள் சந்தை மதிப்பு மதிப்பு முழுமையாக வீழ்ச்சி அடைந்தது விட்டது வாங்குவதற்கு யாரும் தயாராக இல்லை அரசு வங்கியை கூட பாதிக்கப்பட்ட விவசாயிகள் சொத்து அடமானம் வைத்து கடன் கொடுக்க பாதிக்கப்பட்ட விவசாயிகள் சொத்தை அடமானம் வைத்து கடன் கொடுக்க மறுத்து விட்டது. தற்போது கால கட்டங்களில் நிலத்தில் சந்தை மதிப்பு மட்டுமே விவசாயிகளுக்கு ஒரே வாழ்வாதாரமாகஉள்ளதுஇந்தசூழ்நிலையில் பெட்ரோ ரேட் நிறுவனத்தின் திட்டத்தை மத்திய அரசின் பாரத் பெட்ரோலியம் நிறுவனம் கையகப்படுத்த உள்ளது. தற்போது கோவை மாவட்டம் இருவரில் இருந்து கர்நாடக மாநிலம் பெங்களூர் அருகே உள்ள தேவன கொந்தி வரை. 340 கிலோமீட்டருக்கு தற்போது புதிதாக பெட்ரோல் டீசல் கொண்டு செல்வதற்கு என்னை குழாய் அமைக்க திட்டமிட்டுள்ளார் அதில் ஏற்கனவே கோவையில் இருந்து இரு கூரிலிருந்து.திருப்பூர் மாவட்டம் முத்தூர் வரை 70 கிலோமீட்டர் தூரத்திற்கு பழைய எண்ணை குழாய் ஹரியிலையும் மீதமுள்ள 270 கிலோ மீட்டர் தூரம் சாலை ஓரமாகவும் அமைக்கப்பட்டு வருகிறது பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடந்த நான்கு ஆண்டுகளாக ஏற்கனவே அமைக்கப்பட்ட பழைய எண்ணைக் குழாய் பைத்தியம் புதிதாக அமைக்கப்பட்ட உள்ள என்னை குழாயும் சாலை ஓரமாக அமைக்க கோரி பல வகைகளும் போராடி வருகிறார்கள் இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு காவல் துறை பாதுகாப்பு கொடுப்பதற்கு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது இன்று அரசு தரப்பில் தெரிவித்தாலும் தமிழ்நாட்டில் குடிப்பதற்கு கூட தண்ணீர் கொடுக்க மாட்டோம் எனவும் காவிரி பிரச்சனையில் உயர்நீதி மன்ற தீர்ப்பை அமல்படுத்த மாட்டோம் எனவும் மேகதாது அணை கட்டி தீர்வோம் எனவும் அடம் பிடிக்கிறது கர்நாடகாவிற்கு பெட்ரோல் டீசல் கொண்டு செல்வதற்கு நமது விவசாய நிலத்தின் குழாய் பதிக்கும் நாம் ஏன்.? காவல்துறை பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதை இந்த அரசு சிந்தித்து பார்க்க வேண்டும் கடந்த காலங்களில் காவல்துறை பாதுகாப்பு கொடுக்கப்படாமல் இருந்தது ஆனால் தற்போது காவல்துறை பாதுகாப்பு கொடுக்கப்பட்டு திட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளது அனைத்தையும் விவசாய சங்கங்களும் அரசியல் கட்சிகளும் இணைத்து பாதிக்கப்பட்ட விவசாயிகளோட இணைந்து போராடி வருகிறார்கள் அமைதியாக எதிர்ப்புதெரிவிக்கும் விவசாயிகள் மீது காவல் துறை வழக்கு பதிவு செய்கிறது பாதிக்கப்பட்ட விவசாய பெண்களின் நான்கு பேர் நிலம் பறிபோனது என்கின்ற வேதனையில் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்யும் முயற்சியும் செய்து உள்ளனர் இந்த அரசு பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்ற சாலை ஓரமாக என்னை குழாயை அமைத்திட வேண்டும் அல்லது சந்தை மதிப்பிலான இழப்பீடு வழங்க வேண்டும் ஆனால் அதுவும் வழங்கப்படவில்லை என்பது மிகுந்த வேதனைக்குரியது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சந்தை மதிப்பில் இழப்பீடு வழங்குவதாகச் சொன்னாலும் சந்தை மதிப்பு என்பது ஆவணப் பதிவின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுவதால் ஆவணங்கள் அனைத்தும் வழிகாட்டி மதிப்பில் பதிவு செய்யப்படுவதால் சந்தை மதிப்பில் இழப்பீடு வழங்குவதற்காக சூழ்நிலை இல்லை தற்போது பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிலங்களின் வழிகாட்டி மதிப்பிற்கு சந்தை மதிப்பிற்கு 50 மடங்கு அதாவது.2000% வேறுபாடு உள்ளது திட்டத்தை செயல்படுத்தும் பாரத் பெட்ரோலின் நிறுவனம் ஒரு சென்ட் நான்கு லட்சம் ரூபாய்க்கு இருக்கும் இடத்தில் இரண்டு லட்சம் ரூபாய்க்கு பம்பிங் ஸ்டேஷன் அமைப்பதற்கு கிரையம் செய்துள்ளது அதற்கு அருகில் உள்ள கொலை பதிக்கப்பட்டு நிறத்திற்கு ஒரு செல் நிலத்திற்கு வேறு 4.000. மட்டுமே இழப்பீடு நிர்ணயம் செய்துள்ளது




கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் முகாமில், கால் துண்டிக்கப்பட்ட 2 மாற்றுத்திறனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் மூலம் ரூ.49,600 மதிப்பில் செயற்கை கால்களை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் வழங்கினார். உடன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் .முருகேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள்2026 குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் வழங்கப்பட்டுள்ள துண்டு பிரச்சுரத்தை வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பி.எஸ்.லீலா அலெக்ஸ், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார். இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் .து.சுரேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர் .ராஜராஜன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் .சரவணன், மாவட்ட வழங்கல் அலுவலர் .சரவணன், மாவட்ட விளையாட்டு அலுவலர் முனைவர் சேதுராஜன் உட்பட பலர் உடனிருந்தனர்.

# நாகாத்தம்மன் திருக்கோயிலில் 8ம் ஆண்டு ஆடி வெள்ளித் திருவிழா

சிவகங்கை ஆக 17,



காரைக்குடி கம்பன் நகரில் அமைந்துள்ள அருள்மிகு நாகாத்தம்மன் திருக்கோயிலில் 8ம் ஆண்டு ஆடி வெள்ளித் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

விழாவையொட்டி அருள்மிகு நாகாத்தம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் பூஜைகள் நடைபெற்றன. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்து வழிபட்டனர்.

விழாவின் சிறப்பு நிகழ்ச்சியில் கனிமவளத் துறை அமைச்சர் டாக்டர் டி.கே. பிரபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்து, சிறப்பு வழிபாட்டில் பங்கேற்றார். கிட் & கிம் கல்விக் குழும நிறுவனர் அய்யப்பன், அப்லிஃப்ட் ஐஏஎஸ் அகாடமி நிறுவனர் மரிங்கிப்பட்டி ரமேஷ் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர்.

விழாவில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் சிறப்பான முறையில் அன்னதானம் வழங்கப்பட்டது. இதனை பக்தர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர். விழாவையொட்டி கோயில் வளாகத்தில் பக்தர்கள் திரளாகக் கூடி வழிபட்டனர். பக்தர்களின் வசதிக்காக தேவையான ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன. விழா ஏற்பாடுகளை கே.ஆர். நிகரோலி மற்றும் நாகா குரூப்ஸ் & சன்ஸ் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். அவர்களின் சிறப்பான ஏற்பாட்டில் 8ம் ஆண்டு ஆடி வெள்ளித் திருவிழா பக்தி பரவசத்துடன் இனிதே நிறைவடைந்தது.

# ஒகேனக்கல்லில் காவிரி ஆற்றை தூய்மைப்படுத்த 75 நாள் சுற்றுச்சூழல் சேவை திட்டம்

## மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி கோரி We The Leaders அமைப்பினர் மனு

தருமபுரி ஆகஸ்ட் 18



தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் குவிந்து கிடக்கும் கைவிடப்பட்ட துணிகளை அகற்றி, பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 75 நாட்கள் சுற்றுச்சூழல் சேவைத் திட்டத்தை செயல்படுத்த அனுமதி கோரி, மாவட்ட ஆட்சியரிடம் We The Leaders Association அமைப்பின்வழிகாட்டுதலின் கீழ் கவிதா பழனிசாமி முன்மொழிவு மனு அளித்துள்ளார். அவர் செய்தியாளர்களிடம் இது குறித்து தெரிவிக்கும் போது 75 நாள் சேவைத் திட்டத்தை மேற்கொள்ள உள்ளதாகவும், ஒகேனக்கல் பகுதியில் இறுதிச்சடங்கு, ஈமகாரியம் மற்றும் நினைவு நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் சிலர் பயன்படுத்திய துணிகளை காவிரி ஆற்றில் வீசுவது நீண்டகாலமாக நடைபெற்று வருவதாகவும், இதனால் ஆற்றின் கரையோரங்கள், பாறைகள் மற்றும் நீரேற்று நிலையம் அருகேஅதிகளவில்துணிக் கழிவுகள் தேங்கி சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதாகவும்முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. துணிக் கழிவுகள் ஆற்றில் தேங்குவதால் திடக்கழிவு மாசுபாடு ஏற்படுவதுடன், காவிரி ஆற்றின் தூய்மை மற்றும் இயற்கையான நீரோட்டமும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கும் முக்கிய திட்டமாக ஒகேனக்கல் குடிநீர் திட்டம் செயல்பட்டு வரும் நிலையில், அதன் நீரேற்று நிலையத்தைச் சுற்றியுள்ள காவிரி நீரின் தரத்தை பாதுகாப்பது பொதுச்சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முக்கியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. 75 நாள் சேவைத் திட்டத்தின் கீழ், ஒகேனக்கல் காவிரி ஆற்றின் குறிப்பிட்ட மற்றும் பொதுமக்கள்அணுகக் கூடிய பகுதிகளில் கைவிடப்பட்ட துணிகள் மற்றும் துணிக் கழிவுகளை அகற்ற திட்டமிடப்பட்டுள்ளதாகவும், மேலும், சடங்குகள் நடைபெறும் பகுதிகளுக்கு அருகில் பெரிய அளவிலான குப்பைத் தொட்டிகள் அமைத்து, பொதுமக்கள் துணிகளை ஆற்றில் வீசாமல் பாதுகாப்பாக சேகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாகவும், அதுமட்டுமின்றி, பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் கூடும் இடங்களில்விழிப்புணர்வு பதாகைகள் மற்றும் அறிவிப்பு பலகைகள் அமைத்து, காவிரி ஆற்றை தூய்மையாக வைத்திருப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இந்த நடவடிக்கைகள்மூலம் ஒகேனக்கல் பகுதியில் காவிரி ஆற்றின் தூய்மை மேம்படுவதுடன், ஒகேனக்கல் குடிநீர் திட்டத்திற்கான மூல நீரின் தரத்தை பாதுகாக்கவும், ஆற்றங்கரை மற்றும் நீரேற்று பகுதிகளில் துணிக் கழிவுகள் தேங்குவதை குறைக்கவும் முடியும் என தெரிவித்தவர். ஒகேனக்கல்லின் இயற்கை அழகு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மேம்பட்டு, முக்கிய சுற்றுலாத் தலமான ஒகேனக்கல்லின் தூய்மையும் பாதுகாக்கப்படும் என தெரிவித்தார். இந்த 75 நாள் சுற்றுச்சூழல் சேவைத் திட்டத்தை செயல்படுத்த மாவட்ட ஆட்சியர் சரவணனிடம் உரிய அனுமதி மற்றும் வழிகாட்டுதலை வழங்க வேண்டும் என கவிதா பழனிசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.